25th July 1964]

புலவர் கா. கோவிந்தன் : அந்த வீடுகள் கட்டப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன ? இந்தக் குறுகிய காலத்திற்குள் விரிசல்கள் ஏற்பட்டிருப்பதனால், அந்தக் கட்டிடங்கள் நீண்ட காலம் நிலைக்கும் என்ற உத்தரவாதத்தைக் கொடுக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் நான் கொடுத்த பதிலைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். இந்தக் கட்டிடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறபொழுது விரிசல்கள் காணப்பட்டன Cracks were noticed in 24 low income group buildings, which were undervarious stages of construction கட்டி முடிந்த பிறகு இல்லை.

Sethiyathope Anicut

* 710 *Q*.—SRI A. RAMACHANDRA RAYAR :
SRI S. SIVASUBRAMANIAN : } Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to widen the Sethiyathope Anicut in Chidambaram taluk; and

(*b*) if so, when?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) There is no proposal to widen the Sethiathope Anicut; and

(*b*) Does not arise.

Irrigation facilities.

* 711 *Q*.—SRI A. RAMACHANDRA RAYAR : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken to connect Sethiathope Anicut and Vadavar channel through Veeranam and Veeramudayanatham channels in Chidambaram taluk to facilitate the irrigation of an additional 350 acres of land?

கனம் திரு. பூ. கக்கன் : அத்தகைய திட்டம் ஒன்றுமில்லை.

* 712 *Q*.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to construct an irrigation tank near Ummiampatty in Dharmapuri taluk; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) தொப்பூரகனிகாரஹள்ளி கிராமத்திலுள்ள உமயம் பட்டியின் வடக்கில் சின்னக்கணவாய்ப் பள்ளம் ஓடைக்குக் குறுக்கே புதிய குளம் ஒன்றை அமைப்பதுதான் மேற்படி திட்டத்தின் நோக்கம். இது விசேஷ சிறு பாசனத் திட்டத்தின் கீழ் நிறை வேறப்படும். இதன் முக்கிய விவரங்கள் பின் வருமாறு:—

(i) பயன் அடையப்போகும் மொத்தப் பரப்பு—77 ஏக்கர்.
எதிர்பார்க்கும் மகசூல்—35 டன்.

25th July 1964

மேற்படி திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு—ரூ. 1.07 லட்சம்.

(iv) பிரதி டன் கூடுதல் உணவு உற்பத்திக்கு ஆகும் செலவு விதம்—ரூ. 3,057.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: இந்தத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டதா? அப்படி என்றால் எப்பொழுது அமுலாக்கப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வந்திருக்கிறது. இருந்தாலும் காட்டிலாகாவி லிருந்து 14 ஏக்கர் நிலம் ஏரி உண்டுபண்ணுவதற்கும், மற்ற வேலைகளுக்கும், தேவைப்படுகிறது. கான்சர்வேட்டர் ஆஃப் பாரஸ்ட்ஸ் இடமிருந்து இன்னும் பதில் வரவில்லை. அந்த பிறகு ஒரு முடிவுக்கு வரமுடியும்.

*713 கேள்வி.—**திரு. சி. ம. அம்பிகாபதி:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தலைஞாயிறு கிராமத்தில் ஓடும் நல்லாற்றைப் பிரித்து வெட்டி, வேதாரண்யம் கால்வாயில் நீரை வடியவிடும் திட்டம் ஏதேனும் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன்: இல்லை, ஐயா.

குறைந்தபட்ச சம்பளச் சட்டம்

*714 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குறைந்த பட்ச சம்பளச் சட்டத்தின் தற்போதைய நடைமுறையைப் பரிசீலிக்க மத்திய சர்க்கார் மாநில சர்க்காரைக் கேட்டுக்கொண்டதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரம் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை

குடிநீர்த் திட்டம் (கோவில்பட்டி தாலுகா)

*715 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் கோவில்பட்டி தாலுகாவில் குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு 1962-63-ம் ஆண்டில் என்னென்ன திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன?